**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**


| | | |
|---|---|---|
| **S.நாகராஜன் M.Com.,** | **K.சந்திரசேகரன்,B.A** | **B.தியாகராஜன்,** |
| **தலைவர்** | **பொதுச்செயலாளர்** | **நிதிச்செயலாளர்** |


கடித எண்:56/19
நாள்: 19-03-2019

பெறுதல்:
தமிழக தலைமை தேர்தல் அதிகாரி,
நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தல்கள்,
தலைமை செயலகம்,
சென்னை – 9.

பெருமதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : நாடாளுமன்ற மற்றும் தமிழக சட்டமன்றத்திற்கான இடைத்தேர்தல்கள் - தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் - தேர்தல் விதி முறைகள் மீறல் தொடர்பான புகார்.

பார்வை : Tangedco Notification No:1/2019, Dt:07-03-2019. (Copy enclosed).

*********

கீழ்கண்டவற்றை தங்களது மேலான கவனத்திற்கு உரிய அவசர நடவடிக்கை மேற்கொண்டிட வேண்டி கொண்டு வர விரும்புகின்றோம்.

இந்திய நாட்டின் பாராளுமன்றத்திற்கான தேர்தல் நடத்துவது தொடர்பான அறிவிப்பு 10-03-2019 அன்று மத்திய தேர்தல் ஆணையரால் அறிவிக்கப்பட்டது. எதிர்வரும் 23-05-2019ம் நாள் வரை தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருக்கும் என மேற்கண்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருக்கும் காலத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் போன்ற அரசு பொதுத்துறை நிறுவனங்களில் எந்தவித பணிநியமனம், பதவி உயர்வு, ஊர்மாற்றம் ஆகியவைகள் நடைமுறைபடுத்தக் கூடாது என்று விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தேர்தல் நடத்தை விதிகளுக்கு மாறாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் 5000 கேங்மேன் என்ற புதிய பொறுப்பினை உருவாக்கி நிரப்பிட முடிவு செய்து பார்வையில் குறிப்பிட்டுள்ள அறிவிக்கை வாயிலாக அந்த நியமனத்திற்கு எதிர்வரும் 22-03-2019 லிருந்து 22-04-2019ம் நாள் வரை விண்ணப்பங்களை பதிவு செய்திட விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

மின்கழக நிர்வாகத்தின் மேற்கண்ட நடவடிக்கை, தேர்தல் நடத்தை விதிகளுக்கு விரோதமானது என்பதால், தமிழக தேர்தல் அதிகாரி அவர்களை இப்பிரச்சனையில் தலையிட்டு கேங்மேன் என்ற பதவிக்கு 5000 நபர்களை நியமித்திட தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி நியாயம் வழங்கிட வேண்டிக் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

தோழமையுள்ள,

(K.சந்திரசேகரன்)
பொதுச்செயலாளர்

இணைப்பு : 1

நகல் : 1. தலைவர், கோவை.
2. அமைப்புச் செயலாளர், மேட்டூர்.
3. செய்திமடல்.